## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 03.06.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

9) ஓலைப்பட்டி கிராமம் சர்வே எண்கள்.248/1A1, 1A2, 1B ஆகியவை கடந்த 27.07.1955 ம் வருட கிரய பத்திரப்படி மந்தி (எ) காவேரி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி மந்தி (எ) காவேரிக்கு அம்மாசி, சித்தன், சின்னப்பையன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி நபர்களை தவிர மந்தி (எ) காவேரிக்கு என்பவருக்கு வேறு வாரிசுகள் யாருமில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி மந்தி (எ) காவேரிக்கு "காவேரி" என்ற பெயரில் மகன் உள்ளதாக நான் சொல்லியிருந்தால், அது தவறானது என்றால் சரிதான்.

10) மேற்படி மந்தி (எ) காவேரிக்கு எப்போது இறந்தார் என்பதற்கான ஆதாரங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 38 வருடங்களுக்கு முன்பு மந்தி (எ) காவேரி இறந்துவிட்டார் என்றால், சரிதான். அதற்கு மேல் கூட இருக்கும். என் பாட்டனார் பெயர் மந்தி (எ) காவேரி என்றால், சரிதான். மேற்படி என் பாட்டனார் மந்தி (எ) காவேரி இறந்ததற்கு பின்னிட்டு நாங்கள் எப்போது சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டோம் என்ற விவரத்தை என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

11) மேற்படி மந்தி (எ) காவேரி உயிருடன் இருந்தபோதே வாய்மொழியாக தன்னுடைய மகன்கள் மூன்று பேருக்கும் பாகம் பிரித்து கொடுத்து விட்டார் என்றால், சரிதான். அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரித்ததில் அம்மாசிக்கு சர்வே எண்.248/1B ல் 0.74 சென்ட் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். ச.எண்.248/2 ல் 0.28 சென்ட் நிலம் சிந்தாமணியூர் மெயின் ரோட்டிலிருந்து, வாதி-பிரதிவாதிகளின்

நிலங்களை சென்றடைய வேண்டி இருவராலும் பொது வழித்தடமாக அனுபவிக்கப்பட்டு வந்தது என்றால், சரியல்ல. ச.எண்.284/1A1 ல் 0.74 செண்ட் நிலம் சித்தன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான். ச.எண்.248/1A2 ல் 0.70 செண்ட் நிலம் சின்னப்பையன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றால், அவருக்கும் 0.74 செண்ட் நிலம் தான் ஒதுக்கப்பட்டது.

12) மேற்படி சின்னப்பையன் இறந்துவிட்டார் என்றால், சரிதான். இவ்வழக்கில் 17, 18 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால், சரிதான். மேற்படி 17 ம் பிரதிவாதி தன் பதிலுரையில் தனது தந்தை சின்னப்பையனுக்கு மேற்படி பாக பிரிவினையில் எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என சொல்லியுள்ளார் என்பது குறித்து நான் தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். 0.74 செண்ட் நிலம் என சொல்லியுள்ளார்.

13) கடந்த 19.05.1987 ம் தேதியில் அம்மாசி ச.எண்.248/1A3 ல் 0.53–1/4 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால், சரிதான். 1, 10 பிரதிவாதிகளின் தந்தையும், 7, 9 பிரதிவாதிகளின் பாட்டனாருமான சித்தன் என்பவர் அதே தேதியில் 1.06–1/2 ஏக்கர் நிலத்தை ச.எண்.248/1A3 ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். அதேபோல் 18 ம் பிரதிவாதி பழனி ச.எண்.248/1A3 ல் 0.53–1/4 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு 18 வருடங்களுக்கு முன்பு மேற்படி சித்தன் இறந்துவிட்டார் என்றால், சரிதான்.

14) இவ்வழக்கில் பழனி, ஆறுமுகம், குழந்தைபையன், பெரியசாமி, ராஜமாணிக்கம் ஆகியோர் மேற்படி சித்தனின் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி சித்தன் இறந்ததற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் அவருக்கு பாத்தியப்பட்ட மேற்படி

சொத்துக்களை அனுபவித்து வந்தனர் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.